**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண்.187/2023**

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாள் வெள்ளி கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாத்திமா பீவி | க/பெ.: | முஸ்தபா |
| கிராமம்: | கட்டிமேடு | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | முஸ்லிம் | தொழில்: | வீட்டு குடித்தனம் |
| வயது: | 44 | முகவரி: | கட்டிமேடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 09.01.2026.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் வாதி அதிகார முகவர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. வாதியின் தந்தை நைனா முகமது பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.1** ஆகும். வாதியின் தாயார் ஜீலைக்கா பீவி பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.2** ஆகும். வாதியின் மூதாதையர் ஆமீனா அம்மாள் மற்றும் பாத்திமா பீவி பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகும். வாதியின் தந்தை நைனா முகமது என்பவரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். வாதியின் தந்தையின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 15.10.2023–ல் வாதி வழக்கறிஞர் சார்பதிவாளர் மற்றும் மற்றவர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்

**வா.சா.ஆ.6** ஆகும். 3,4 பிரதிவாதிகள் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை (எண்ணிக்கை–2) அசல் **வா.சா.ஆ.7** ஆகும். வாதி , எனக்கு வழங்கிய பொது அதிகார ஆவணம் அசல் **வா.சா.ஆ.8** ஆகும். 17.05.1981 –ல் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய சாசன சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.